REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க.தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 3] சென்னை: ஆடி 10உ செவ்வாய் (26—7—55) ★ ★ வெளியூர்: ஆடி 11உ புதன் (27—7—55) [இதழ் 36

## அகதிகளுக்குக் கடன்—
## 6 மாத காலத்தில் ரூ. 36 லட்சம்!

புதுடில்லி, ஜூலை 25—

கடந்த 1954 டிசம்பர் 31-ந் தேதியுடன் முடிவடைந்த ஆறு மாத காலத்தில், கிழக்கு பாகிஸ்தானிலிருந்து ஓடிவந்த அகதிகளுக்கு இந்திய சர்க்கார், ரூ. 36,50,150 கடனாகத் தந்து உதவியிருக்கின்றனர் என்று தெரிகிறது.

# 'கவர்னர் சம்பளத்தைக் குறை!—

## அரண்மனைச் செலவை வெட்டு!

## 'சென்னை ரூ. 8 லட்சம் செலவிடுகிறதே!— ஆந்திராவில் நாம் ரூ. 5 லட்சம்தானே செலவிடுகிறோம்!'

### கவர்னர் சம்பளக் குறைப்புக் கோரிக்கைக்கு ஆந்திர முதல் மந்திரியின் மழுப்பல்

"கவர்னர் சம்பளவகையிலும், அவருடைய அரண்மனை பராமரிப்பு வகையிலும் கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூபாய் 13½ லட்சம் செலவு செய்யப்பட்டிருக்கிறது; இத்துறையில் செலவழிக்கப்படும் பணத்தைக் குறைக்க வேண்டுமென ஆந்திர மாநில அரசாங்கம் இந்தியப் பேரரசின் தலைவரை வற்புறுத்த வேண்டும்; அக்கோரிக்கை, காங்கிரஸ் கூறும் சமதர்ம வடிவ ஏற்பாட்டிற்கு உடன்பாடு உடையதேயாகும்."

*இவ்வாறு, கவர்னர், அமைச்சர்கள், அரசாங்க அலுவல்துறை ஆணையாளர்கள் சம்பளக் கோரிக்கையின் மீது, ஆந்திர சட்டசபையில் எழுந்த விவாதத்தின்போது, எதிர்க்கட்சித் தலைவர் பி. சுந்தரையா கோரியுள்ளார்.*

"கவர்னர் சம்பளம் 'அதிகம்' எனக்கூறுவது பொருந்தாது; சென்னையில் கவர்னருக்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 8 லட்சத்திற்குக் குறையாமல் செலவிட்டு வரும்பொழுது, ஆந்திராவில் இவ்வகையில் ரூ. 5 லட்சம்தான் செலவிடப்பட்டு வருகிறது;

"கவர்னர் சம்பளச் செலவில் மற்ற மாநிலங்களில் செலவழிக்கப்படுவதைவிட, ஆந்திராவில் குறைவாகவே செலவிடுகிறோம் என்பது நிச்சயமாகும்;

"சென்னையிலோ அல்லது கல்கத்தாவிலோ இருக்கின்ற கவர்னர் அரண்மனைகளுடன் ஒப்பிடுகின்ற அளவில், ஆந்திரா அரண்மனை இருக்கவில்லை; கவர்னர் சம்பளத்தையும், வேறு செலவினங்களையும் ஒப்புக்கொள்வதற்கு முன்பாக, இந்தியப் பேரரசின் தலைவரும் உள்நாட்டு அமைச்சரும், அவைகளை சீர்தூக்கிப் பார்த்தே முடிவுக்கு வந்துள்ளனர்.

"*தங்கள் விருப்பப்படி செலவிடுவதற்கென ரூ. 8,800 தான் இங்கு கவர்னருக்குத் தரப்படுகிறது; மற்ற மாநிலங்களில் தரப்படுவதைவிட இது மிகக் குறைவானதாகும்; இந்த விருப்பப்படி செலவிடப்படும் தொகை, சில மாநிலங்களில் அமைச்சர்களுக்கும், துணை அமைச்சர்களுக்கும்கூட தரப்படுகிறது.*"

*கவர்னர் செலவு குறைப்பு வெட்டுப் பிரரேபணையை ஆதரித்து சில காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களும் கலந்துகொண்டுள்ளனர்.*

*மந்திரிகள் சுற்றுப் பயணத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் அவைகளுக்காக அதிகப் பணம் செலவாவதைத் தவிர்க்கவேண்டும் என்றும், மந்திரிகள் சுற்றுப் பிரயாணத்தின்போது குறிப்பிட்ட மந்திரியின் அலுவல் துறை அதிகாரிகள் நீங்கலாக மற்ற அரசாங்க அலுவல் துறை அதிகாரிகள் அம்மந்திரியின் பின்னால் திரிவதைத் தவிர்க்க வேண்டும் என்றும், அதனால் வீணில் பணம் செலவாவதுடன், நிர்வாகமும் தேங்கிவிடுகிறது என்றும், காங்கிரஸ் கட்சியினர் உள்ளிட்டு சில உறுப்பினர்கள் பேசியுள்ளனர்.*

*கவர்னருடன் தொடர்பு கொண்டிருக்கும் இராணுவ காரியதரிசி பதவியை அறவே நீக்கிவிட வேண்டுமென்றும், இப்பொழுது இராணுவத்திற்கும், கவர்னருக்கும் எந்த விதத் தொடர்பும் இல்லாதிருக்கும் பொழுது, அப்படி ஒரு அதிகாரியை நியமித்திருப்பது பொருத்தமற்றதாக இருக்கிறது என்றும் உறுப்பினர்கள் கோரினர்*

### 10 மாநிலங்கள் கடன் எழுப்புகின்றன

*சென்னை மாநிலம் உட்பட மொத்தம் 10 மாநிலங்கள் ரூ 35·75 கோடி கடன் எழுப்ப முடிவு செய்திருக்கின்றன.*

### சர்க்கார் ஊழியர் சம்பள விகிதம்

*இரண்டாம் திட்டப்படி உயர்த்தப்படும்?*

*மதுரை, ஜூலை 25—*

*இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் சர்க்கார் ஊழியர்களின் சம்பளங்களை உயர்த்துவது பற்றி சர்க்கார் பரிசீலித்துக்கொண்டிருப்பதாக நம்பகமாகத் தெரிகிறதென செய்தி வெளியாகியுள்ளது.*

*கடைசிப் பிரிவு குமாஸ்தாக்களின் இரு பிரிவுகள், இதர 'கெஜட்' பதிவில்லாத அதிகாரிகள் ஆகியோரது சம்பள விகிதங்களை உயர்த்துவது சர்க்காரின் எண்ணம் என்று கூறப்படுகிறது.*

*பல்வேறு பிரிவு ஊழியர்களுக்கும் சர்க்கார் புதிய விகிதங்களைத் தயாரித்துள்ளனர்; இலாகாக்களின் தலைவர்களுக்கும், மாவட்ட அலுவலகங்களுக்கும் அவ்விகிதங்களை அனுப்பி அவற்றை அமுல் செய்வதானால் சர்க்காருக்கு அதிகப்படியாக எவ்வளவு செலவாகும் என்று சர்க்கார் தகவல் கேட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.*

### பாங்கி விசாரணைக் குழு

*பம்பாய், ஜூலை 25—*

*பாங்கி விசாரணைக் குழுவின் அறிக்கை இன்று கையெழுத்தாகிவிட்டது. பம்பாய் உயர்நீதிமன்ற நீதிபதி பி. பி. கஜேந்திர காட்கர் தலைமையில் நியமிக்கப்பட்ட குழு 300 பக்கங்கள் கொண்ட இந்த அறிக்கையைத் தயாரித்திருக்கிறது.*

## கவனிப்பாரற்றுக்கிடந்த கடவுள் சிலைகள்!

### 'ராஜபவன'த்தில் உயிர்பெற்றிருக்கின்றனவாம்

*ஆந்திர சட்ட சபையில் தகவல்*

கர்னூல், ஜூலை 25—

"அகோபில மடத்திற்கருகில் இருந்த சிலைகள் பலவற்றை கவர்னரின் இராணுவ செயலாளர் எடுத்துச் சென்று கவர்னரின் இராஜபவனத்தில் 'பிரதிஷ்டை' செய்திருக்கிறார்; அந்தச் சிலைகளை அகற்றுவதற்கு, மக்களின் அனுமதி பெறப்படவில்லை,"

*என்று, ஆந்திர சட்ட சபையில் பத்மநாப ராஜு என்ற உறுப்பினர் ஆட்சேபம் தெரிவித்திருக்கிறார்.*

*இதற்குப் பதிலளித்த முதன் மந்திரி பி கோபால ரெட்டியார் கூறினார்:—*

"மக்கள் எவராலும் வணங்கப்படாத சிலைகள்தான் எடுத்து வரப்பட்டன; கவனிப்பாரற்றுக் கிடந்த அந்தச் சிலைகளைக் கொண்டுவந்து 'ராஜபவன'த்தில் பாதுகாப்புடன் வைத்து, அவற்றை மீண்டும் உயிர்ப்பித்திருக்கிறார்கள் — அவ்வளவுதான்."

## கோவில் நிதியிலிருந்து ரூ. 1 கோடி!

### சர்க்கார் எழுப்பும் கடனில் முதலீடு செய்யப்படும்?

*கும்பகோணம், ஜூலை 25—*

*சர்க்கார் அண்மையில் எழுப்பியுள்ள கடனுக்கு கோவில் நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்யப்படுமென கூறப்பட்டது. பல கோவில்களுக்கும், விவாதத்திற்குப் பின்னால் கோட்டா நிர்ணயிக்கப்பட்டது.*

## காங். மேலிடத்தார் முடிவு மீறப்படுகிறது!

## 'அகாலியர் மீதுள்ள தடையை திரும்பப்பெற்றது ஏன்?'

### ஆராய காங்கிரஸ் சட்ட சபைக் கட்சியைக் கூட்டும்படி உறுப்பினர் கோரிக்கை

'அகாலியர், மொழிவழி கோரிக்கையை முழங்கக் கூடாது, என, பஞ்சாப் காங்கிரஸ் அரசாங்கம் தடை விதித்திருந்தது. தடையை மீறி 8,000 அகாலியர்களுக்குமேல் சிறை சென்றனர்

தடை உத்தரவு காலாவதியாக இரண்டு நாள் இருக்கும்பொழுது, எதிர்பாராத வகையில் பஞ்சாப் அரசாங்கம், அந்தத் தடையுத்தரவைத் திரும்பப் பெற்றுக்கொண்டது.

தடை உத்தரவு திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதற்காக— அதற்கு மூலகாரணமாக இருந்த முதல் மந்திரி சச்சாருக்கு, மந்திரி சபைக்குள்ளாகவே எதிர்ப்பு கிளம்பியது.

பஞ்சாப் பிரதேச காங்கிரசும், சச்சார் போக்கைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியது.

மேற்படி பூசலில் காங்கிரஸ் மேலிடம் தலையிட்டு, சிக்கல் தீர்க்கப்பட்டு விட்டதாக அறிவித்தது.

காங்கிரஸ் மேலிடத்தின் தீர்ப்பு, நான்கு மணி நேரம்கூட நிலை பெறவில்லை!

அதற்குள்ளாகவே, அகாலியர் மீது விதிக்கப்பட்டிருந்த தடையைத் திரும்பப் பெற்றுக்கொண்டதற்கான விளக்கத்தை முதல் மந்திரி பீம்சேன் சச்சார் கூற வேண்டும் என்றும், அதற்காக சட்டசபை காங்கிரஸ் கட்சியைக் கூட்ட வேண்டும் என்றும், 41 காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் கையெழுத்திட்ட கோரிக்கை மனுவை, அவரிடம் கொடுத்துள்ளனர். இக்கோரிக்கை போக்கு, காங்கிரஸ் மேலிடத்தார் முகத்தில் கரி பூசும் ஒன்றாகும்.

*கட்சி விதியின்படி கோரிக்கை மனு கிடைத்த ஏழு நாட்களுக்குள்ளாக, கூட்ட தேதியைக் குறிப்பிட்டு உறுப்பினர்களுக்கு, சச்சார் அறிக்கையிட்டாக வேண்டும். கூட்டத்தையும் பதினன்கு நாட்களுக்குள்ளாகக் கூட்டியாகவேண்டும்.*

*அகாலியர் முழக்கத்திற்கு விதிக்கப்பட்ட தடையை ரத்து செய்த சச்சார் போக்கில் தங்களுக்குள்ள கண்டனத்தை, காங்கிரஸ் தலைவர் தேபரிடம், பஞ்சாப் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் நேரில் கூறியுள்ளனர்.*

*கட்சியின் நம்பிக்கையை முதல் மந்திரி சச்சார் இழந்துவிட்டதாகவும், அதற்காக அவர் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து நீக்கப்படவேண்டியது கட்டாயமாகிறது எனவும், அக்காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் கூறினதாகவும் நம்பப்படுகிறது.*

*சச்சார் போக்கை எதிர்க்கும் பிரதாப் சிங் கெய்ரோனை, அமைச்சர் பதவியைவிட்டு விலகி, சட்ட சபைகாங்கிரஸ் கட்சித் தலைமைக்குப் போட்டியிடும்படியாகவும், காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் பலர் வற்புறுத்துவதாகவும் தெரிகிறது.*

## ஆட்சி மொழியாக தெலுங்கு!

### அவசரப்பட வேண்டாமென்கிறார் கோபால ரெட்டி

*கர்னூல், ஜூலை 25—*

*"தெலுங்கை ஆந்திர மாநிலத்தின் ஆட்சி மொழியாக ஆக்க வேண்டுமென உறுப்பினர்கள் இங்கு கூறினார்கள்; திடீரென தெலுங்கை ஆட்சி மொழியாக ஆக்கிவிட முடியாது; இப்போதுள்ள சர்க்கார் அதிகாரிகள் நெடுங்காலமாகவே, சர்க்கார் அலுவல்களை, ஆங்கிலத்திலேயே கவனித்து வந்திருக்கின்றனர்;*

*"அடுத்து வரும் சில ஆண்டுகளில் தெலுங்கு மொழியில் நல்ல அறிவு பெற்ற இளைஞர்கள், சர்க்கார் அலுவலகப் பொறுப்பை ஏற்க முன்வருவார்கள். அப்போது, தெலுங்கை ஆட்சி மொழியாக்குவதற்கான ஒரு நல்ல சூழ்நிலை உருவாக முடியும்; இதற்கிடையில், சர்க்காரை, தெலுங்கை உடனே ஆட்சி மொழியாக்குமாறு நிர்ப்பந்தப் படுத்துவது நல்லதல்ல," என்று, முதன் மந்திரி பி கோபால ரெட்டி ஆந்திர சட்டசபையில் கூறியிருக்கிறார்.*

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 26—7—'55 செவ்வாய்

# குமுறும் எரிமலை!

தொழில் துறையில் தென்னாடு பின்தங்கிக் கிடக்கிறது. கடந்த எட்டு ஆண்டுகளில் காங்கிரசார் ஆட்சிபீடமேறிய நாளிலிருந்து இன்றுவரை—தென்னாட்டில் சுட்டிக்காட்டிப் பெருமைப்படத்தக்க அளவில் எந்த ஒரு புதிய தொழிற்சாலையும் உருவாகவில்லை.

'இதெல்லாம், ஓரணா, அல்லது ஒன்றரையணா' என்ற நிலையிலிருக்கும் சாதாரண விளையாட்டுச் சாமான்களிலிருந்து, சோப்பு, சீப்பு, கண்ணாடி முதலிய பொருள்கள், அவ்வப்போது அழிந்துபடும் அழகுச் சாதனங்கள், மற்றும் இன்றியமையாத வாழ்க்கை வசதிக்கான பொருள்கள் போன்றவற்றை எல்லாம் உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலைகள் எவையும் தென்னாட்டில் இல்லை.

'பெட்ரூம்' விளக்குக்குத் தேவையான கண்ணாடி சிம்னி, காலையில் கையில் மாட்டி, அவை குலுங்கும் ஒலியில் உளம் மகிழ்ந்து, மாலையில் உடைத்தெறியும் கண்ணாடி வளையல்கள் கூட தென்னாட்டில் செய்யப்படுவதில்லை.

ஏற்கனவே பெரும் பெரும் தொழிற்சாலைகள், நெசவாலைகள், உருக்கு, இரும்பு ஆலைகள், வேறுபல பெரும்பொருள் உற்பத்திக்கான ஆலைகள் எல்லாம் குவிந்து கிடக்கும் வடநாட்டிலேயேதான், வாழ்க்கையில் மக்கள் உபயோகிக்கும் அன்றாட சாமான்களை உற்பத்தி செய்வதற்கான சிறு தொழில்களும் இருக்கின்றன.

இப்படி, வட நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கோடிக்கணக்கான ரூபாய் பொருள்களுக்குச் சந்தைக் கடையாக தென்னாடு விளங்கிக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் ஐந்தாண்டுத் திட்டம் என்ற பெயரால் மேற்கொள்ளப்பட்ட புதிய பெரிய-சிறிய தொழில் முயற்சிகள் எல்லாம் வடக்கேயே அமைக்கப்படுவது, "தென்னாட்டை என்றென்றைக்கும் நிரந்தரமாக—வளர முடியாத—விவசாயத்தை மட்டும் நம்பிக்கிடக்கச் செய்து, வடநாட்டின் தொழிற் பெருக்கத்துக்குத் தேவையான 'மார்க்கெட்'டாக—'காலனி'யாக ஆக்கிவிடுவதாகும்" என்று நாம் பல காலமாகவே கண்டனக் குரல் எழுப்பி வருகிறோம்.

'முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாட்டிற்கு வடவர் இழைத்த அநீதியைக் கண்டிக்காத நாவினர் எவரும் நாணயமற்றவர்,' என்ற நாட்டவரின் கண்டனத்திற்குள்ளாகும் நிலை, இன்று நாட்டில் வளர்ந்திருக்கிறது.

டெல்லி ஆட்சியாளர்களுக்கு தென்னாட்டவரின் உள்ளக் குமுறலும், வடவரின் போக்கு விளைவிக்கும் கொடுமையும் ஒன்றுக்கு மேற்பட்ட பல தடவைகளில்—ஒன்றுக்கு மேற்பட்ட பலரால் உணர்த்தப்பட்டாகிவிட்டது.

ஆனாலும், வடநாட்டு ஆட்சியாளர்கள், தென்னகத்தின் நியாயமான குற்றச்சாட்டுகளுக்குச் சமாதானம் கூறும் நேர்மை படைத்தவர்களாக இருக்கவில்லை என்பதை அவர்களின் 'தலைவர்'களது மௌனம் சொல்லிக் கொண்டிருக்கிறது.

தென்னாட்டிற்கு ஏற்கனவே இழைக்கப்பட்டுள்ள அநீதிக்கு இதுவரை பதில் சொல்லாதது மட்டுமின்றி, அடுத்த திட்டங்களிலேனும் தென்னாட்டுத் தொழில் வளர்ச்சிக்கு 'இன்னவை செய்யவிருக்கிறோம்' என்றுகூட அவர்கள் சொல்லவில்லை, இதுவரையில்!

ஆனால், இதற்கிடையில், 'தென்னாடு அலட்சியப்படுத்தப்பட்டதேன்? எல்லாத் தொழிற்சாலைகளுமே வடநாட்டில் தானா?—பெரிய தொழிற்சாலைகள்தான் இங்கு அமைக்காவிட்டாலும் சிறிய சிறிய தொழிற்சாலைகளையாவது ஏன் அமைக்கக் கூடாது?—என்று தென்னாட்டு மக்கள், தங்களுக்குக் கிடைத்த பெரும் ஏமாற்றத்தின் விளைவாக அடைந்துள்ள மனவேதனையினால் குமுறிக்கொண்டிருக்கிற நேரத்திலேயே வடநாட்டின் பல பாகங்களிலும் புதுப் புதுத் தொழிற்சாலைகள், பெரியனவும்—சிறியனவுமாக முளைத்துக் கொண்டிருக்கின்றன என்பதை அறிவிக்கும் செய்திகள் குவிந்துள்ளன.

"இங்கு, கூடை முடைதலும், பாய் பின்னுதலும் 'குடிசைத் தொழில்' என்ற 'லேபி'ளுடன் வளர்க்கப்படுவதாகக் கூறப்படும் முயற்சிதான் தொழில் வளர்ச்சி முயற்சியா — வேறெதுவுமில்லையா?" — என்ற தென்னாட்டவரின் ஏக்கம் தோய்ந்த கேள்விக்கு, வடநாட்டில் முளைக்கும் புதிய புதிய தொழிற்சாலைகள், என்ன பதிலைத் தருகின்றனவோ?

இந்த ஜூலைத் திங்களில் மட்டும், இதுவரை வட நாட்டில் உருவாகும் தொழிற்சாலைகள் பற்றி வெளிவந்துள்ள அறிவிப்புகளில் நம் கண்களுக்குப்பட்ட ஒரு சில மட்டும் இங்கு கூறுவது பொருத்தமுடையதே!

ஏற்கனவே, ஒரு உரத் தொழிற்சாலை அமைந்துள்ள சிந்திரி வட்டத்தில் மேலும் ஒரு உரத் தொழிற்சாலையை 50 இலட்சம் பவுன் செலவில் அமைக்க இந்திய சர்க்கார் இத்தாலி நாட்டு கம்பெனி ஒன்றுடன் ஒப்பந்தம் செய்துள்ளனர்.

பம்பாய் மாநிலத்தில் சுமார் ஒரு கோடி ரூபாய் மூலதனத்தில் பெரும் பால் பண்ணை ஒன்று துவங்கப்படும்.

பீகார் அல்லது மேற்கு வங்க மாநிலத்தில் ரூ. 52 கோடி செலவில் ஒரு செயற்கை எண்ணெய் உற்பத்திசாலை துவங்கப்படும்.

மேற்கு பாகிஸ்தான் அகதிகளின் புனர்வாழ்வுக்கென மேலும் ரூ. 15 கோடி செலவில் மேற்கு வங்க மாநிலத்தில் அல்லது டெல்லியில் சிறிய—பெரிய தொழிற்சாலைகள் துவக்குவதற்குத் திட்டம்;

குஜராத் மாநிலத்தில், 'கேப்பே' எனும் பகுதியில் ஒரு சிறிய கப்பல் துறை கட்ட சில கோடி ரூபாயில் திட்டம்;

பம்பாய் மாநிலத்தில் சில கோடி ரூபாய் செலவில் ஒரு அணு உலை அமைக்கத் திட்டம்;

சௌராஷ்டிரத்தில் செயற்கைப் பட்டுத் தொழிற்சாலை ஒன்றை ரூ. 6 கோடி மூலதனத்துடன் துவங்க திட்டம்;

மத்திய மந்திரி பண்டித பந்தின் யோசனைப்படி டெல்லியில், 2,000 படித்த இளைஞர்களுக்கு வேலை தருவதற்கான சிறிய தொழில் திட்டங்கள்.

ரூ. 7 கோடி செலவில்திட்டமிடப்பட்டிருக்கும் காற்றுப் பொறித் திட்டம் சௌராஷ்டிரத்திலா—கோவையிலா என்பது முடிவாகவில்லை.

இவை மட்டுந்தானா? புற்றுநோய் ஆராய்ச்சிக் கழகம் போன்ற புதியபுதிய ஆராய்ச்சி நிலையங்கள்.

இவை எல்லாம், நடைபெறும் ஜூலைத் திங்களில் வெளிவந்த அறிவிப்புகளிலிருந்து திரட்டப்பட்டனவற்றில் ஒரு சில.

ஐந்தாண்டுத் திட்டப்படியோ, அல்லது அரசாங்கத் துறையின் கீழோ, தனியார் துறையின் கீழோ, மத்திய அரசாங்கமாகவோ, மாநில அரசாங்கமாகவோ—எப்படியோ, இந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் வடநாட்டின் பல்வேறு பகுதிகளிலுமாக துவங்கப்படுவதாக அறிவிப்பு வந்துள்ளது.

தென்னகத்தில் இப்படிச் சிறிய சிறிய தொழில்களில் ஒன்றிரண்டேனும் துவக்கப்படவிருக்கின்றன என்பதற்கான அறிவிப்புகளே காணவில்லை.

வளர்ந்துள்ள வடக்கு, மேலும் மேலும் வளமாக வேண்டி, வகை வகையான தொழில் திட்டங்கள் தீட்டப்படுகின்றன!

வாடி வதங்கும் தென்னாடு, இருந்தபடியே இருக்கின்றது—இம்மியளவும் முன்னேறாமல்—தொழில் துறையில்!

தென்னாடு, ஏக்கத்தாலும், ஏமாற்றத்தாலும், 'ஏன் இந்த இழி நிலை?'—என்ற சிந்தனை தரும் பதிலாலும் குமுறிக் கொண்டிருக்கிறது; ஆனால், வடநாடு, ஆர்ப்பாட்டமின்றி ஆகாயத்தை நோக்கி வளர்ந்து கொண்டே போகிறது — வாழ்வை வளமாக்கும் தொழில் துறையில்—நமது குமுறலைப் பொருட்படுத்தாமல்!

குமுறும் எரிமலை என்றாவது வெடித்து, நெருப்புக் குழம்பைக் கக்கத்தான்போகிறது—என்பதைத்தான், தென்னாட்டின் தேய்வும் நிலையும், வடநாடு வளரும் வேகமும் நாட்டவருக்குச் சொல்லிக்கொண்டிருக்கின்றன!

# ரஷ்யாவில் சம்பள விகிதம்...

## நேரு தரும் தகவல்

புதுடில்லி, ஜூலை 24—

"ரஷ்யாவில் குறைந்த பட்சச் சம்பளம் சுமார் 400 ரூபிள்கள்—அதிகபட்சச் சம்பளம் 3 முதல் 4 ஆயிரம் ரூபிள்களாக இருக்கிறது; அதிக சம்பளம் கொடுப்பதால், கஷ்டப்பட்டு, சிரமத்துடன் வேலை செய்வதற்கு ஊக்கமேற்படுவதாகச் சொல்லப்படுகிறது," என்று பண்டித நேரு தகவல் தந்திருக்கிறார்.

# கல்வி பரவ வேண்டியதின் அவசியம்

## முதலமைச்சர் காமராசர் கருத்து

"எல்லோரும் படிப்பதற்கு வசதிகள் வேண்டும்; படித்தால் மட்டும் போதுமா? நிறையப் படித்தவர்கள் பெருகுவதால் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகுமே என்ற கேள்வி ஒருபுறம் இருக்கிறது; இதற்காக 'படிப்பே கூடாது' என்று சிலர் சொல்லுகிறார்கள்; இது தவறு;

"படித்தவர்கள் பெருகிவிட்டதால் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிவிட்டது என்று படிப்பின்மேல் ஒரேயடியாகக் குறை சொல்லக்கூடாது;

"நம் நாடு இயற்கை வளம் மிக்கது; இங்கேயுள்ள இயற்கைச் செல்வத்தை, மனித சக்தியைக் கொண்டு பெருக்கிப் பயன்படுத்த வேண்டும்; இத்துறையில் முயன்று நமது வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கிக்கொள்ள வேண்டும்;

"நம்முடைய நாட்டில் படிப்பை பரப்புவது கடினம்; காரணம், அவ்வளவு வறுமை; எல்லாப் பிள்ளைகளும் படிக்க வேண்டுமென்றால் சம்பளம் கூடாது; மேலும், பலருக்குப் புத்தகங்கள்கூட நாமே வாங்கிக் கொடுக்க வேண்டும்; புத்தகம் வாங்கிக் கொடுத்தாலும், படிக்க வசதியற்ற ஏழைகள் நம்முடைய நாட்டில் இருக்கிறார்கள்; அவர்களுக்குச் சோறு போடுவதாக அழைத்துப் படிக்க வைக்க வேண்டும்."

—இவ்வாறு, சென்னை முதலமைச்சர் காமராசர், காரைக்குடி நகராண்மைக் கழகத்தின் வெள்ளி விழாவை ஒட்டி, நகர மன்ற உயர்நிலைப் பள்ளியின் புதுக் கட்டிடத் திறப்பு விழாவிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

# சென்னை மாநில சர்க்காரின் நிதி நிலைமை

## கடன் எழுப்பும் நிலைபற்றி கண்ணோட்டம்

சென்னை, ஜூலை 24—

இலாபமளிக்கக்கூடிய மின்சாரத் திட்டங்களிலும், நீர்ப்பாசனத் திட்டங்களிலும் மூலதனம் போடுவதற்காக இப்போது சென்னை மாநில சர்க்கார் வெளியிடும் ரூ 7 கோடி கடன் பத்திரங்கள் சம்பந்தமான ஒரு குறிப்பில் சென்னை மாநில சர்க்காரின் நிதி நிலைமையையும், சொத்துக்களின் நிலைமையையும் பற்றி பின்வரும் தகவல்கள் தரப்படுகின்றன:—

### வருமான நிலைமை

1954—55-ல் சென்னை சர்க்காரின் வருமானத்தைவிட செலவு ரூ. 390 லட்சம் அதிகமாக இருந்தது—அதாவது ரூ 390 இலட்சம் துண்டு விழுந்தது; ஆனால் 1955—56ல், இவ்வாறு துண்டு விழுந்த தொகை ரூ. 170 இலட்சமே இவ்வாறு துண்டுவிழுவதுகூட சாதாரணச் செலவுகள் காரணமாகவல்ல—ஐந்தாண்டுத் திட்டத்தின் பகுதியாக பல அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பணம் செலவிட்டதால்தான் வரவு-செலவில் துண்டு விழுவதாகக் காணப்படுகிறது.

### கடன்களும் பொறுப்புகளும்

1953 செப்டம்பர் 30-ந் தேதிக்குப் பிறகு ஆந்திரம் பிரிந்ததின் காரணமாக சென்னை மாநிலத்தின் சொத்து—கடன் பொறுப்புகள் இன்னும் இறுதியாக முடிவு செய்யப்படவில்லை. ஆயினும், 1955 மார்ச் வரை இருந்த நிலைமையைக் கவனித்தால் இம் மாநிலத்தின் கடன் பொறுப்பு சுமார் 76.4 கோடி; இதில்—

1. பிரிவினைக்கு முன்னுள்ள கடன் பொறுப்பில் இந்திய சர்க்காருக்குச் செலுத்தவேண்டியது ரூ. 36.8 கோடி;

2. மார்க்கெட்டில் வாங்கியுள்ள கடன்களும், மீட்காமல் வட்டி மட்டும் செலுத்தவேண்டிய கடன்களும் ரூ. 22.3 கோடி;

3. பிரிவினைக்குப் பின்னால் இந்திய சர்க்காரிடம் வாங்கிய கடன் ரூ. 17.3 கோடி;

இவ்வாறு 76.4 கோடி கடனுக்கு எதிராக நம்மிடம் உணவு தானியக் கையிருப்பை இந்திய சர்க்காரிடம் ஒப்படைக்க உத்தேசிப்பதால் இந்தப் பொறுப்பு 73.5 கோடியாகக் குறையும்.

இவை தவிர, இதர பொறுப்புகள் என்பன—சென்னை கூட்டுறவு நில அடமான பாங்கிக்கு ரூ 700 லட்சத்துக்கு உத்தரவாதம் செய்திருப்பதும், சென்னை தொழில் முதலீடு கார்ப்பரேஷனுக்கு ரூ. 98 லட்சம் வரை ஜாமீன் கொடுத்திருப்பதுமாகும். இவை சம்பந்தமாக இப்போதுள்ள பொறுப்பு 4.5 கோடிதான்.

பிராவிடண்ட் பண்டு நிதிகள் சம்பந்தமான பொறுப்பு சுமார் ரூ. 6¼ கோடி; இவையாவும் சேர்த்து கடன் முதலிய பொறுப்புகள் சுமார் ரூ. 84½ கோடி.

### சொத்துக்கள்

இந்தக் கடன் பொறுப்புக்கு எதிராக சர்க்காரிடம் வருமானமளிக்கத்தக்க முதலீடுள்ள சொத்துக்களாக ரூ. 92.4 கோடி இருக்கிறது; விபரம் வருமாறு:—

1. நீர்ப்பாசன, மின்சார அமைப்புகள்: 55 கோடி;

2 சர்க்காருக்கு வரவேண்டிய கடன்: ரூ 18.5 கோடி;

3 தொழில் முதலீட்டுக் கார்ப்பரேஷன்களிலும், இதர நிறுவனங்களிலும் போட்டுள்ள முதலீடு 1 3 கோடி;

4. கொய்னாப் பட்டைத் தோட்டங்கள், பஸ் போக்குவரத்து முதலிய வர்த்தகத்துறைகளில் உள்ள பத்திரங்கள் ரூ. 3 கோடி;

5. வெவ்வேறு நிதிகளில் உள்ள பத்திரங்கள் ரூ 8.3. கோடி;

6 ரொக்கம் ரூ 6.3 கோடி.

இது 1955 மார்ச் 31-ந் தேதி இருந்த நிலைமை.

இது தவிர இன்னும் பல நீர்ப்பாசன அமைப்புகள் இருக்கின்றன. இவை வருமானம் தராதவை என்று சொல்லப்பட்டாலும், மூலதனம் போடப்பட்டுள்ள சொத்துக்களேயாகும். சர்க்காரிடம் கட்டிடங்கள், காடுகள் என்று பலவிதமான சொத்துக்கள் வேறு இருக்கின்றன.

# தேங்காய், பாக்கு உற்பத்தி அதிகரிக்க இயக்கம்

அதிகரித்து வரும் தேவைக்கு ஏற்ப தேங்காய், பாக்கு ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு மத்திய விவசாய இலாகா, விசேட இயக்கத்தை ஆரம்பித்திருக்கிறது.

இப்போது ஆண்டுதோறும் ரூ. 3 கோடி பெறுமான 10 லட்சம் மணங்கு பாக்கு இறக்குமதி செய்யப்படுகிறது; 60,000 டன் கொப்பரையும் இறக்குமதியாகிறது.

சென்னை, மைசூர், திருவாங்கூர்-கொச்சி ஆகிய மாநிலங்களில் தென்னை, கமுகு விவசாயிகளுக்கு நவீன சாகுபடி முறைகளைப் போதிக்க மாநில சர்க்கார்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

# இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்

## ரூ. 4,300 கோடியாக சுருங்கிவிட்டது

புதுடில்லி, ஜூலை 24—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் போதுத் துறை அளவு ரூ. **4,300** என்று தேசீய அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

திட்டத்திற்கென திரட்ட முடியும் என்று எதிர்பார்க்கப்படும் மூலதனம் ரூ. **3,500** கோடிதான் என்றும், அங்கீகரிக்கப்பட்டுள்ள திட்டத்தின்படி ரூ. **4,300** கோடிக்கு ரூ. **800** கோடி. துண்டு விழுகிறது என்றும் நிதி மந்திரி தேஷ்முக் அங்கு குறிப்பிட்டிருக்கிறார்.

மூலதனத் தேவையில் இந்தப் பற்றுக்குறையை நிறைவு செய்ய கடுமையான புது வரி விதிப்புகளும், சேமிப்பு முறைகளும் கையாளப்பட வேண்டியிருக்கும் என்று கூறப்படுகிறது.

மத்திய திட்டக்குழு அங்கீகரித்திருப்பதோ, ரூ. **4,300** கோடிக்கான திட்டங்கள்தான்; ஆனால், பல்வேறு மாநில சர்க்கார்களும் சுமார் **12,000** கோடி ரூபாய்க்கான திட்டத்தைத் தயாரித்து அனுப்பியிருந்தனர் என்று கூறப்படுகிறது.

# ரஷ்யா மீது கிருமிப் போர்...

## நடத்தியது உண்மைதானும்!

### ஜப்பானிய பத்திரிகையில் தகவல்

டோக்கியோ, ஜூலை 24—

"கடந்த இரண்டாம் உலகப் பெரும் போரின்போது ரஷ்ய நாட்டின்மீது ஜப்பான் கிருமி ஆயுதங்களை உபயோகித்தது உண்மைதான்,"

என்று, ஹிரோஷி அக்கியாமா என்ற ஜப்பானியர், பத்திரிகை ஒன்றில் எழுதியிருக்கிறார்.

ஜப்பான் மன்னருக்குக்கூடத் தெரியாமல், இந்த ஆயுதங்கள் உபயோகிக்கப்பட்டதாயும், தாம் இந்த நடவடிக்கையை கண்ணால் கண்டதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

# இந்தூர் துப்பாக்கிப் பிரயோகம்...

## 'தேவையற்றது; அதிகாரம் பெருதது!'

### நீதிபதி வாஞ்சு விசாரணை அறிக்கை

இந்தூர், ஜூலை 24—

"கடந்த ஆண்டு ஜூலை **21**-ல், கிருஷ்ணபுரா பாலத்திற்கு அருகிலும், இரயில்வே மேல் பாலத்திற்கு அருகிலும் நடத்தப்பட்ட போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம், 'தேவை இல்லாதது; அதிகாரம் பெருத முறையில் செய்யப்பட்டது.' மேலும், சர்க்கார் அலுவலகத்தின் முன் கட்டுக்கடங்காது மக்கள் கூட்டம் கூடிய ஜூலை **19, 20**-ந் தேதிகளில், சர்க்கார், கி. பு. கோ. **144**-ம் பிரிவைப் பிரகடனப்படுத்தத் தவறிவிட்டிருக்கிறது."

—என்று, போலீசார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகம் பற்றி விசாரணை நடத்திய நீதிபதி கே. என். வாஞ்சு குறிப்பிட்டிருக்கிறார்.

கல்லூரி ஒன்றின் தலையாயவரை மேலும் சில காலம் சேவை செய்ய அவரது பதவிக் காலத்தை நீடிக்க வேண்டுமென மாணவர்கள் கிளர்ச்சி நடத்தினர்.

தகுந்த, போதுமான நடவடிக்கைகளை எடுக்க சர்க்கார் தவறியதின் விளைவாகவே உயர்நீதி மன்றக் கட்டிடத்திற்கும், அங்கிருந்த பொருள்களுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டது; சர்க்காரின் முன்னெச்சரிக்கையான நடவடிக்கைக் குறைவால், போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து 12 பேர்களைக் கொன்றிருக்கின்றனர்.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தைத்தான், 'தேவையற்றது—அதிகார பூர்வமற்றது,' என்று நீதிபதி வாஞ்சு குறிப்பிட்டிருக்கிறார்.

சர்க்கார், நீதிபதியின் விசாரணை பற்றிய அறிக்கை முழுவதையும் வெளியிடவில்லை என்றாலும், அதன் சுருக்கத்தை வெளியிட்டிருக்கின்றனர்—மந்திரிசபைக் கூட்டம் அது பற்றி விவாதித்த பிறகு!

சர்க்காரும், நீதிபதியின் அறிக்கைக்கு இணங்க, தகுந்த நடவடிக்கைகளை எடுக்கத் தவறிய அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளுவதாகக் கூறியிருக்கின்றனர்.

கடந்த செப்டம்பர் திங்களில் நியமிக்கப்பட்ட ஒரே உறுப்பினர் கொண்ட விசாரணைக் குழு, மூன்று, நான்கு மாதங்கள் பலரிடமும் வாக்குமூலம் பெற்று விசாரணை நடத்தி, மேற்கண்ட முடிவுக்கு வந்திருப்பதாகத் தெரிய வருகிறது.

# உங்களுக்குத் தெரியுமா?

தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட குடியினர் ஆகியோரின் நலனுக்காக, அரசியல் அமைப்புச் சட்டத்தில் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. மக்கள் சபைக்கான மொத்த இடங்கள் 495-ல், 72 இடங்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும், 26 இடங்கள் தாழ்த்தப்பட்ட குடியினருக்கும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

மாநில சட்டசபைகள் சம்பந்தப்பட்டமட்டில், எல்லா மாநிலங்களுக்குமான மொத்தம் 3,283 இடங்களில் 477 இடங்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் 192 இடங்கள் தாழ்த்தப்பட்ட குடியினருக்கும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

மத்திய அரசாங்க, அகில இந்திய உத்தியோகங்களுக்கு போட்டிப் பரீட்சைகளின் மூலம் பூர்த்தி செய்யப்படும் உத்தியோக நியமனங்களில், 12½ சதவிகிதம், தாழ்த்தப்பட்டவகுப்பினருக்கு ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

இதர முறைகளில் பூர்த்தி செய்யப்படும் அகில இந்திய உத்தியோக நியமனங்கள் பிரச்சினையில், இன்னும் அதிகமான விகிதாசாரம்—அதாவது, 16 2/3 சதவிகிதம், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்காக ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது.

தாழ்த்தப்பட்ட குடியினரைப் பொறுத்தமட்டில், அத்தகைய தேர்வுமுறை வித்தியாசம் எதுவும் இன்றி, எல்லாப் பிரிவுகளிலும் 5 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மத்திய கல்வி மந்திரி காரியாலயம், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட குடியினர், இதர பிற்பட்ட வகுப்பினர் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களுக்குக் கல்வி வசதிகளைப் பரப்புவதற்காக, 1954—55-ம் ஆண்டுக்கு மொத்தம் ரூ. 107 இலட்சம் வழங்கியிருக்கிறது.

★

# மாநில சர்க்கார்களின் திட்டங்களின் குறைபாடு?

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்வதற்கென ஒவ்வொரு மாநிலமும் தயாரித்துள்ள திட்டங்களனைத்தும், வருமான வரிக்குழுவின் சிபாரிசுகளின் அடிப்படைக்கு மாறாக—விகிதப் பொருத்தமில்லாமல் இருக்கின்றன என்று கூறப்பட்டிருக்கிறது.

மத்திய சர்க்கார் நிர்வாகமும்கூட, இரண்டாது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்வதற்கென தயாரித்துள்ள திட்டங்கள் பொருத்தமற்றவையாகவே இருக்கின்றன என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இந்திய சர்க்கார் திட்டக் குழுவும் தேசீய அபிவிருத்திக் குழுவும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மொத்தத் திட்ட மதிப்பீடு ரூ. 5,600 கோடி என்றும், இதில் ரூ 2,200 கோடியை தனியார் துறைக்கு ஒதுக்க வேண்டுமெனவும் திட்டமிட்டுள்ளன. ஆனால், மாநில மந்திரிகளும், மத்திய மந்திரிகளும் தேசீய அபிவிருத்திக் குழுவின் உறுப்பினர்களாக இருந்தும்கூட, தற்போது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கென மத்திய சர்க்கார், மாநில சர்க்கார்கள் அனைத்தும் மொத்தத்திற்கு ரூ 7,000 கோடிக்கென திட்டங்கள் தயாரித்திருக்கின்றனர்.

எனவே, தற்போது திட்டக் குழுவினர், 'தயவு தாட்சணியமற்ற வேலை'யாக, அத்திட்டங்களின் மதிப்பீட்டுத் தொகைகளைக் குறைக்கவேண்டியவர்களாக இருக்கின்றனராம்!

"நிலவரி வருமானத்தில் துண்டு விழுகின்ற மாநிலங்களும்கூட மிகப் பெரிய அளவில் திட்டங்கள் தயாரித்திருக்கின்றன; இதனின்றும், மாநில சர்க்கார்களின் இந்தத் திட்ட மதிப்பீட்டுத் தொகைகளுக்கெல்லாம் மத்திய சர்க்கார்தான் வழிவகை செய்யவேண்டும் என்பதுதான் மறைந்து கிடக்கும் நோக்கம் என்று தெரிகிறது. ஒவ்வொரு மாநிலமும், 'மற்ற மாநிலத்தைவிட தன்னுடைய மாநிலத்தில் அதிகமான அளவில்—நல்ல திட்டங்கள் தயாரிக்கவேண்டும்' என்ற மனப்பான்மையிலேயே திட்டங்கள் தயாரிக்கின்றன—தற்போதைய அரசியல் சூழ்நிலைகளும்கூட, அத்தகைய ஒரு மனப்பான்மையை—'அதிக அளவில் திட்டங்கள் துவக்கவேண்டும்' என்ற மனப்பாங்கை உருவாக்கியிருக்கின்றன. மேலும், அதிகமதிகமான அளவில் திட்ட வேலைகளை முதன் முதலிலேயே துவங்கிவிட்டால், பின்னர், அந்தத் திட்ட வேலைகளை முடிக்க, திட்டக் குழுவிடம் கடன் வாங்கிக்கொள்ளலாம் என்ற ஒரு எண்ணம் இருப்பதுமே மாநிலங்களின் இத்தகைய போக்கிற்கு மற்றொரு காரணமாகவும் இருந்திருக்கிறது" என்றும் கூறப்பட்டிருக்கிறது.

அவரவர் எண்ணம் எதுவாயினும், முடிவு, அவர்களது திட்டத்திற்கு மாறுபட்டதாகவும், இறுதியான திட்டத்தைத் தயாரிக்க அவர்கள் செலவு செய்த நேரமும் முயற்சியும் வீணனதாகவே இருக்கும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

# கைத்தறி சலுகை: ரூ. 5,000 மோசடி செய்த வியாபாரிகள்

எட்டயபுரம், ஜூலை 25—

எட்டயபுரத்தை அடுத்துள்ள நாகலாபுரம் புதூரில் கைத்தறி விலையில் தள்ளுபடி அளிக்கும் சலுகையை பொய்க் கணக்குகள் காட்டி ஏமாற்றிய மூன்று வியாபாரிகளின் 'ரிபேட்' லைசென்சை நெல்லை மாவட்டக் கலெக்டர் ரத்து செய்தார். இந்த மூன்று வியாபாரிகளும் மொத்தம் ரூ. **5,000** வரை அரசாங்கத்தை ஏமாற்றி மோசடி செய்திருந்தார்கள் என்று கூறப்படுகிறது.

எட்டயபுரத்தை அடுத்துள்ள நாகலாபுரம் புதூரில் கைத்தறி துணிகள் விற்பனைக்கு அளிக்கப்பட்டிருக்கும் கைத்தறி விலை தள்ளுபடி சலுகையை மூன்று வணிகர்கள், விற்பனை பில்களில் தினந்தோறும் கள்ளத்தனமாகக் கையெழுத்துப் போட்டு, பொய்யான விற்பனைகள் காட்டி கணக்கு வைத்திருந்ததை துணிக் கட்டுப்பாடு இன்ஸ்பெக்டர் திடீரென்று சோதனை செய்ததில், 'விற்பனை பில்கள் எல்லாம் பொய்யானவை' என்று கண்டுபிடிக்கப்பட்டதாம்.

துணி வாங்காத பலருடைய பெயரால் துணி விற்பனை செய்யப்பட்டதாக பில்கள் இருந்தன. அம்மாதிரியானவர்களிடம் வாக்கு மூலங்கள் வாங்கப்பட்டனவாம்.

இது சம்பந்தமாக அந்த மூன்று வியாபாரிகளின் கைத்தறி ரிபேட் லைசென்சு ரத்து செய்யப்பட்டதாம்.

## மைசூரிலும் தமிழ்க்கழகம்

மைசூர் மாநிலத்தில் தமிழ் இலக்கியங்களையும், கலாச்சாரத்தையும் பரப்ப, 'மைசூர் மாநில தமிழ்க் கழகம்' என்ற நிறுவனம் ஒன்று பெங்களூரில் அமைக்கப்படும். பம்பாய், கல்கத்தா, புதுடில்லி முதலிய இடங்களில் இத்தகைய சங்கங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

# 6 இந்திய மாதர் கல்லூரிகளுக்கு அமெரிக்க உதவி

வாஷிங்டன், ஜூலை—

இந்தியாவில் 6 பெண் கல்லூரிகளில் வீட்டுப் பொருளாதாரம், ஆராய்ச்சி ஆகியவை முன்னேறுவதற்கு டென்னசி பல்கலைக் கழகம் உதவியளிக்குமென சர்வதேச ஒத்துழைப்பு நிர்வாக நிறுவனம் தெரிவிக்கிறது.

இந்தக் கல்லூரிகளுக்கு, அமெரிக்காவிலிருந்து வீட்டுப் பொருளாதார நிபுணர்களை அனுப்புவதுடன், டென்னசி பல்கலைக் கழகத்துக்கும் இக்கல்லூரிகளுக்குமிடையே போராசிரியர், மாணவர் பரிவர்த்தனை நடைபெறுவதற்கும் இத்திட்டம் வசதியளிக்கும்.

இந்த ஒத்துழைப்புத் திட்டத்துக்காக அடுத்த மூன்று ஆண்டுகளில் வெளிநாட்டு உதவி திட்டப்படி 5,53,000 டாலர் செலவு செய்ய இப்பல்கலைக் கழகம் சர்வதேச ஒத்துழைப்பு நிர்வாக நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

இந்தியக் கல்வி நிலையங்களில் வீட்டுப் பொருளாதாரத் துறையில் பயிற்சியை விரிவாக்குதல், கல்வியும் ஆராய்ச்சியும், வீட்டுப் பொருளாதார ஆசிரியர்களின் பயிற்சி அபிவிருத்தி, மருத்துவ விடுதி யுள்ள உணவு அதிகாரிகளுக்குப் பயிற்சி, வீட்டுப் பொருளாதார ஊழியர்களுக்கு உத்தியோகத் துறையில் பயிற்சி அளித்தல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கங்கள்.

# இரண்டாம் திட்டத்தில் கைத்தறி வளர்ச்சிக்காக...

## ரூ. 100 கோடியில் திட்டமாம்!

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் கைத்தறித் தொழில் வளர்ச்சிக்காக, ரூ. 100 கோடிக்கான நகல் திட்டம் ஒன்றை அகில இந்திய கைத்தறி 'போர்டு' தயாரித்திருக்கிறது.

மத்திய சர்க்காரிடம் தரப்படவிருக்கும் இத்திட்டத்தினை பொதுப்படையாக அகில இந்திய கைத்தறி 'போர்டு' அங்கீகரித்திருக்கிறது.

திட்டத்தின் விவரங்கள் இன்னும் தயாரிக்கப்படவில்லை.

கைத்தறிகளை அபிவிருத்தி செய்ய நெசவாளர்களுக்கு கடன் தரவும், நூல் உற்பத்திக்காகக் கூட்டுறவு நூற்பு ஆலைகளை நிறுவவும் இத்திட்டத்தில் வழி செய்ய உத்தேசிக்கப்படுகிறது!

கிராம சேவிகைகளுக்கான மத்திய சமூக நல போர்டின் பயிற்சித் திட்டத்தின் கீழ், தற்போது சுமார் 1,000 சேவிகைகள் கஸ்தூரிபா ஞாபகார்த்த நிதி நிறுவனம் நடத்திவரும் நிலையங்களில் பயிற்சிபெற்று வருகின்றனர்.

# கோவா பிரச்சினை

## அ. இ. கா. செயற்குழு தீர்மானம்

புதுடில்லி, ஜூலை 23—

"கோவா விடுதலைக்காக வெளி இடங்களிலிருந்து ஏராளமான தொண்டர்கள் சத்தியாக்கிரகத்திற்காக கோவாவிற்குள் நுழைவதை ஆதரிக்க முடியாது;"

"ஏராளமான தொண்டர்கள் கோவாவிற்குள் நுழைந்தால், கோவா விடுதலை இயக்கத்தின் அமைதியான சூழ்நிலை கெடுவதற்கு வழி ஏற்படுவதுடன், எந்த நோக்கத்திற்காக அவ்வியக்கம் நடைபெறுகிறதோ, அந்த நோக்கத்திற்கே பெரும் பாதகம் விளைவிப்பதாகவும் ஆகிவிடும்,"

என்று, இங்கு கூடிய அகில இந்திய காங்கிரசின் செயற் குழுக் கூட்டத்தில், கோவா பிரச்சினை குறித்த தீர்மானம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

"கோவா விடுதலைப் பிரச்சினையில் இந்தியாவிலுள்ள மற்றெல்லோருக்கும் சிரத்தை இருந்தாலும்கூட, கோவானியர்கள்தான் தாங்களாகவே தங்கள் விடுதலைக்கான போராட்டங்களை அமைதியான முறையில் மேற்கொள்ள வேண்டும்," என்றும் அத்தீர்மானத்தில் கூறப்பட்டிருக்கிறது.

எனினும், கோவா விடுதலையில் இந்திய சர்க்கார், சமாதான முறையில், தேவையான காலங்களில், தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று நம்பப்படுவதாகவும் அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**ஆசிரியருக்குக் கடிதம்:**

## இது என்ன கலாச்சாரம்?

★

ஐயா,

இந்திய சர்க்காரின் செய்திப் படத்தில், பண்டித நேரு தன்னுடைய ரஷ்ய சுற்றுப் பயணத்திற்குப் பிறகு டில்லி நகர சபையில் கொடுக்கப்படும் வரவேற்புக்குப் பதில் அளிக்கும்பொழுது, தன் இரு கால்களையும் மக்களை நோக்கி மேடையின் கைப்பிடிச் சுவற்றின் மீது வைத்துக்கொண்டு பேசுகிறார்; இது, மேல்நாட்டு கலாச்சாரத்தைச் சேர்ந்ததாக இருக்க முடியாது; திராவிட கலாச்சாரத்திற்கு மிகவும் அப்பாற்பட்டது; எனவே, நேரு அவர்கள், தன்னை மறந்தே, ஆரியக் கலாச்சாரத்தின் பிரதிநிதியாக விளங்குகிறார் போலும்!

கா. பெருமாள்,
நாமக்கல்.

## சென்னை சர்க்கார் பால் பண்ணை

ரூ. 10 லட்சம் செலவில் உற்பத்தியை அதிகரிக்கத் திட்டம்

சென்னை தேனாம்பேட்டையில் உள்ள சர்க்கார் பதப்படுத்தப்பட்ட பால் உற்பத்திப் பண்ணையின் உற்பத்திச் சக்தியை, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் நாள் ஒன்றுக்கு ஒன்றரை லட்சம் ராத்தலாக அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

இது சம்மந்தமாக மாநில சர்க்காரினால் ரூ. 10 லட்சம் செலவில் ஓர் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பண்ணை, பதப்படுத்தப்பட்ட பால் உற்பத்தி செய்வதை இம்மாதத் துவக்கத்தில் ஆரம்பித்தது.

இப்போது அங்கு நாளொன்றுக்கு 4,500 ராத்தல் பதப்படுத்தப்பட்ட பால் உற்பத்தி செய்யப்படுகிறது; இது, அடுத்த இரண்டு மாதங்களில் 8,000 ராத்தலாக அதிகரிக்கப்படும்.

பதப்படுத்தப்பட்ட பாலில் கொழுப்பு சத்து குறைவாக இருப்பதால்—அதாவது 3.5 சத விகிதம்—இந்தப் பாலை எல்லா வயதினரும் உபயோகிக்கலாம் என்று கூறப்படுகிறது.

இது, எருமைப் பால், எடுக்கடைந்த பால் ஆகிய இரண்டும் சம அளவில் கலக்கப்பட்டதாகும்.

## வீட்டு வாடகைக் கட்டுப்பாடு சட்டம்

சென்னை வீட்டு வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தை மேலும் இரு ஆண்டுகளுக்கு நீடித்து, அடுத்து கூடவிருக்கும் சட்ட சபைக் கூட்டத்தில் மசோதா ஒன்று கொண்டு வரப்படும் என்று தெரியவருகிறது.

தற்போதைக்கு சென்னை நகரிலும் மற்றும் நகர சபைப் பகுதிகளான திருப்பத்தூர், திருவண்ணாமலை, வேலூர், சிதம்பரம், கடலூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், கோவை, பொள்ளாச்சி, போடி, கொடைக்கானல், மதுரை, பழனி, பெரியகுளம், உதகை, குன்னூர், சேலம், கும்பகோணம், மாயூரம், தஞ்சை, திருவாரூர், கரூர், ஸ்ரீரங்கம், திருச்சி, மேலப்பாளையம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய இடங்களிலும் சட்டம் அமுலுக்கு வரும்.

## புதுவைத் தேர்தல்

முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன

புதுவை, ஜூலை 25—

புதுவைப் பகுதியின் 39 இடங்கள் கொண்ட சட்டசபைக்கு கடந்த 18-ந் தேதி முதல் 23-ந் தேதிவரை நடத்தப்பட்ட தேர்தலில் இதுவரை 31 இடங்களுக்கான முடிவுகள் அறிவிக்கப்பட்டு விட்டன; இன்னும் 8 இடங்களுக்கான முடிவுகள் மட்டுமே அறிவிக்கப்பட வேண்டியுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள 31 இடங்களில் 17 இடங்களை புதுவை மாவட்ட காங்கிரஸ் கைப்பற்றியுள்ளது—(புதுவை வட்டம் ஐந்து; காரைக்கால் வட்டம் ஒன்பது; மாஹி ஒன்று; ஏனாம் இரண்டு).

கம்யூனிஸ்டுகள் பெருவாரியாக உள்ள மக்கள் முன்னணியினர் இதுவரை 12 இடங்களைக் கைப்பற்றி இருக்கின்றனர்—(புதுவை வட்டத்தில் எட்டு; காரைக்கால் வட்டத்தில் இரண்டு; மாஹியில் இரண்டு)

புதுவையிலும், காரைக்காலிலுமாக இரு சுயேச்சைகளும் வெற்றி பெற்றிருக்கின்றனர்.

காங்கிரசில் இன்னுமொரு கோஷ்டியினரான செல்லண்ண நாயக்கர் கோஷ்டியினர் இதுவரை ஒரு இடத்தில்கூட வெற்றிபெறவில்லை அந்த கோஷ்டியினர் இந்தத் தேர்தலில் மொத்தமாக 18 இடங்களுக்குப் போட்டியிட்டனர்.

## கல்லூரிகளில் ஆங்கிலத்திற்குப் பதில் இந்தியாம்!

பல்கலைக் கழக துணைவேந்தர்கள் முடிவு என்ன?

இந்தியப் பல்கலைக் கழகங்களில் ஆங்கிலத்திற்கு பதில் இந்தியை எல்லாப் பாடங்களுக்கும் உபயோகிக்கும் பிரச்சினையைக் குறித்து பரிசீலிக்க, பம்பாய், அசாம், ஒரிசா, மேற்குவங்கம், தென்னிந்திய பல்கலைக் கழகம் ஆகியவைகளின் துணைவேந்தர்களின் கூட்டமொன்று செப்டம்பர் இறுதியிலோ அல்லது அக்டோபர் ஆரம்பத்திலோ நடைபெறக்கூடுமென தெரிகிறது.

தென்னிந்தியப் பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களின் கூட்டமொன்றில், இம்முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தி பிரதேச மொழியாக இல்லாத பல்கலைக் கழகங்களுக்கு இது ஒரு பெரும் பிரச்சினையென தென் இந்தியத் துணைவேந்தர்கள் அபிப்பிராயப்பட்டதாகக் கூறப்பட்டது

## பாரதிதாசன் வெற்றி!

புதுவைத் தேர்தல் முடிவுகள்

புதுவையில் நடைபெற்ற சட்ட சபைத் தேர்தலில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்.

காசுக்கடைத் தொகுதியில், மக்கள் முன்னணி அபேட்சகராக பாரதிதாசன் போட்டியிட்டு 1,684 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

அவரை எதிர்த்து நின்ற அன்சாரி என்ற காங்கிரஸ்காரர் 1,403 வாக்குகளும், முனுசாமி என்பவர் 830 வாக்குகளும் பெற்றுதோல்வியுற்றிருக்கின்றனர்.

## மொராக்கோவில் கலகம் பரவுகிறது

மீனெஸ் (மொராக்கோ)

ஜூலை 25—

பிரெஞ்சு மொராக்கோவின் மூன்றாவது பெரிய நகரமான மீனெசில் இன்று நடந்த கலவரங்களில் பலர் கொல்லப்பட்டனர் என்று தெரியவருகிறது.

மொராக்கோவின் புதிய பிரெஞ்சு ரெசிடெண்ட் ஜெனரல், மொராக்கோ நிர்வாகத்தை மேற்கொள்வதற்காக சுற்றுப் பிரயாணம் செய்கையிலேயே கலகங்கள் தோன்றின.

'ரெசிடெண்ட்—ஜெனரல்' வருவதாக இருந்த இடத்தை நெருங்க விடாமல் ஆர்ப்பாட்டக்காரர்களைத் தடுப்பதற்காக போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

நாடு கடத்தப்பட்ட சுல்தான் மகமது பென் யூசபின் பெயரை ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷித்துக் கொண்டிருந்தனர்.

கடந்த நான்கு நாட்களில் கசாபிளாங்காவில் நடந்த கலவரங்களில் 93 பேர் மாண்டனர்; சுமார் 250 பேருக்கு மேல் காயமடைந்தனர் என்று தெரியவருகிறது.

### திரு. வி. க. மன்ற திறப்பு விழா

27—7—55 மாலை 6 மணிக்கு சென்னை, ஆயிரம் விளக்கு, நகராண்மைக் கழக ஆண் பள்ளி அருகில், தோழர் வி. வி. செளலி தலைமையில் நடைபெறும். தோழர் அருள் தங்கையா மன்றத்தைத் திறந்துவைப்பார். தோழர்கள் கண்ணதாசன், டி. வி. நாராயணசாமி, என். ஜீவரத்தினம் டி. எம். சண்முகம் எம். சி., தோழியர் லட்சுமி முத்தையா ஆகியோர் பேசுவர்.

## கழகக் கூட்டம்

★

வயிரிசெட்டிப்பாளையம் கோப்பம்பட்டி தேர் நிறுத்தத் திடலில்

28—7—55 மாலை 5½ மணிக்கு

தலைவர் :

ப. அரங்கசாமி எம்.எல்.ஏ.

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு

எம். எஸ். மணி

இரவு 9 மணிக்கு, பாரதிதாசன் நாடக மன்றத்தாரால், தோழர் ச. கணபதி தலைமையில், 'மன்னிப்பு' எனும் நாடகம் நடைபெறும்.

## மாநில மாநாட்டு நிதி

தென்னாற்காடு மாவட்ட தி.மு. கழகத் தோழர்கட்கு

"தென்னாற்காடு மாவட்ட தி. மு. கிளைக் கழகங்களுக்கென நிர்ணயிக்கப்பட்ட மாநில மாநாட்டுப் பங்கீட்டுத் தொகையை, பல கிளைகள் இதுவரை செலுத்தாமலே இருந்துவருவது வருந்தத்தக்கதாகும். அதுபோன்றே, தனிப்பட்ட கழக ஆதரவாளர்களும், தோழர்கள் தாங்கள் வாக்களித்துள்ள தொகையைக் கொடுக்காது, காலம் தாழ்த்திவருகின்றனர். இதன் விளைவாக நமது மாவட்டத்தில் அண்ணா சுற்றுப்பயணத்திற்கும், மாநில மாநாட்டு நிதி அளிப்புக்கும் திட்டவட்டமான நாளைக் குறிப்பிட முடியாமல் இருக்கிறது. எனவே, மேலும் நாள் கடத்தாமல், தங்கள் தங்கள் பங்குத் தொகையை உடனடியாக மாவட்டச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டுகிறேன்."

முகவரி: —இரா. சாம்பசிவம், தென்னாற்காடு மாவட்ட தி. மு கழகச் செயலாளர், 7, குருவப்ப நாயுடு தெரு, புதுப்பாளையம் கடலூர் (என். டி.)

ஃ ஃ ஃ

குறிப்பு:—"பல கழகத் தோழர்கள் திராவிடக் கழக 'ஆகஸ்டுப் போராட்டம்' குறித்து நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என அஞ்சல் மூலம் என்னைக் கேட்டுள்ளனர். அவர்கள் அனைவரும், 'நம் நாடு' இதழில் வெளியிட்டுள்ள தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அறிக்கையின்படி கட்டுப்பாடாக நடந்துகொள்ளும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்,"

என்று, தென்னாற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் இரா. சாம்பசிவம் அறிவிக்கிறார்.

## திருப்பூர் தி. மு. கழகத் தோழர்கட்கு

"திருப்பூர் தி. மு. கழகத்தில் ஏற்பட்டுள்ள சில நிலைமைகளைப் பரிசீலிக்கவும், முடிவு எடுக்கவும், 31—7—55 காலை 10 மணிக்கு, பொதுக் குழு உறுப்பினர் தோழர் எல். எம். எஸ். நாதன் அவர்களது நியூ எரா நிட்டிங் கம்பெனி கட்டிடத்தில், (அவிநாசி ரோடு) திருப்பூர் தி. மு. கழகக் கிளையின் பொது உறுப்பினர்கள் யாவரும் வந்து கூடுமாறு பணிவன்புடன் வேண்டுகிறேன்,"

என்று, கோவை மாவட்ட தி. மு கழகச் செயலாளர் தோழர் ஈ. வெ கி சம்பத் அறிவிக்கிறார்.

### திருக்குறள் வகுப்பு

27—7—55 மாலை 6 மணிக்கு, சென்னை-புரசை, 100, வெள்ளாளத் தெரு, தொண்டைமண்டல வேளாளர் சங்கத்தில், தோழர் க. அன்பழகன் திருக்குறள் வகுப்பு நடத்துவார்.


வெளிவந்துவிட்டது! 24—7—55 முதல் !!

'சண்டே அப்சர்வர்'

(THE SUNDAY OBSERVER)

(ஆங்கில வார இதழ்)

ஆசிரியர்: பி. பாலசுப்பிரமணியனார்

வீலை : தனி இதழ் ... அணா 2

ஆண்டுச் சந்தா ரூ. 8; ஆறு மாதச் சந்தா ரூ 4

47, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, மவுண்ட் ரோடு, சென்னை—2


## முதலாளிகள் 'காலத்திற்கேற்ப நடந்து கொள்ளவேண்டும்'

மத்திய மந்திரி கூறுகிறார்

"நிர்வாகத்தில் தொழிலாளர்கள் பங்கெடுத்துக் கொள்வதற்கு வழி செய்ய வேண்டிய காலம் வந்துவிட்டதென்று நான்கருதுகிறேன்; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இதை நிறைவேற்றி வைப்பதற்கேற்றதோர் ஏற்பாடு வகுக்கப்பட வேண்டுவது அவசியம்; நிறுவனத்தை நடத்துவதிலும் அதன் வெற்றி-தோல்வியிலும், அவர்களில் அனேகருக்குச் சொந்த இலாப—நஷ்டம் இருப்பதற்கு வகை செய்வதை முன்னிட்டு, தொழிலாளர்கள், கம்பெனிகளின் பங்குகளைப் பெறவும், அவற்றை வைத்துக்கொள்ளவும் தொழிலாளர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்க வேண்டும்,"

என்று, மத்திய சர்க்கார் தொழிலாளர் நல மந்திரி கந்துபாய் தேசாய் குறிப்பிட்டுள்ளார்.

"சோஷலிச மாதிரி புதிய சமுதாய அமைப்பில், செல்வ உற்பத்தியின் முக்கிய மூலாதாரங்களில் மிகப் பெரிய தனி அம்சமான தொழிலாளரின் உழைப்புக்குரிய இடம் அவசியம் அளிக்கப்படும்," என்றும் அவர் கூறினார்.

"ஆனால் சோஷலிசம் என்பது உரிமைகள் அதிகம் என்பது மட்டுமல்ல; அதில் அதிகமான பொறுப்புகளும் உண்டு; சோம்பேறிகளுக்கு அதில் இடமில்லை; சமுதாய முன்னேற்றத்துக்காக தம் கடமையைப் புரியத் தயக்கமாக இல்லாத தொழிலாளர்கள் எவரும் யாருடைய அனுதாபத்தையும் எதிர்பார்க்க எவ்வித காரணமும் கிடையாது," என்றும் அவர் குறிப்பிட்டார்.

தொழிலதிபர்களும் கால மாறுதல்களுக்கேற்ப நடந்துகொண்டு, 'அதிகம்' என்று சமூகம் கருதாத அளவு இலாபத்துடனேயே திருப்தியடைவார்கள் என்று தாம் நம்புவதாகவும் மந்திரி அறிவித்தார்.

## டாக்கா மஸ்லின்!

மீண்டும் உற்பத்தி?

புகழ் பெற்ற டாக்கா மஸ்லின் துணி உற்பத்தியை மீண்டும் துவங்குவதென, அகில இந்திய கதர், கைத்தறி போர்டு முடிவு செய்திருக்கிறதாம்.

### இந்தோனேஷிய மந்திரி சபை நெருக்கடி

இந்தோனேஷிய மந்திரி சபை இன்று ராஜிநாமாச் செய்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது இராணுவ அலுவலகத் தலைவர் பதவிக்கும் புதியதாக ஒருவர் நியமனம் செய்யப்பட்டதைஒட்டி கடந்த நான்கு கிழமைகளாக நெருக்கடி ஏற்பட்டிருந்தது.

புதிய சர்க்கார் ஏற்படும் வரையில். டாக்டர் அலி சாஸ்த்ரோமித் ஜோஜோ தலைமையில் உள்ள கூட்டு மந்திரி சபையே 'காபந்து' சர்க்காராக இருக்குமாம்.

## கோவா விடுதலைக்கான அடுத்த கட்டம்?

போர்ச்சுகீசிய ஆதிபத்தியத்திற்கு எதிராக நடவடிக்கை

டில்லி தூதுவராலயத்தை மூடிவிடக் கோரிக்கை

புதுடில்லியிலுள்ள போர்ச்சுகீசியத் தூதுவராலயத்தை, ஆகஸ்டு 8-ந் தேதியிலிருந்து மூடிவிடும்படி இந்திய சர்க்கார் கேட்டுக்கொண்டுள்ளதாம்; இதுபற்றிய குறிப்பொன்று, போர்ச்சுகல் தூதுவராலய அமைச்சரிடம் தரப்பட்டுவிட்டதாம்.

தற்போதுள்ள நிலைமையில், அக்காரியாலயம் தொடர்ந்து பணியாற்றுவதில் எவ்வித பயனுமில்லை என்று இந்திய சர்க்கார் முடிவெடுத்ததாம்.

அக்காரியாலயத்தை மூடிவிட்டபோதிலும், சமாதான முறையில், பிரச்சினைக்குப் பரிகாரம் காணுவதற்குத் தொடர்ந்து முயற்சிக்கப்படுமென்றும், சமரசப் பேச்சுக்களை இந்தியா வரவேற்குமென்றும், மக்கள் சபையில் குறிப்பிட்டு கூறிவிட்டு, பிரதமர் நேரு தொடர்ந்து சொன்னார்:—

"கோவா பிரச்சினையில், பலாத்காரத்தில் இறங்க ஊக்கமளிக்கும் செய்கைகள் எவற்றையும் இந்திய சர்க்கார் ஒப்பாது; கோவா, இந்தியாவின் ஒரு பகுதியேயாகும்; அது, இறுதியில், இந்தியாவின் ஒரு பகுதியாகிவிடும் என்பதில் சந்தேகமேயில்லை; அந்நாட்டின் கலாச்சாரம், அங்கு வாழும் மக்களின் விருப்பப்படி பாதுகாக்கப்படும்."

### ஸ்பெயினுடன் உறவு

இந்தியா பரிசீலிக்கிறதாம்!

ஸ்பெயின் நாட்டில் தூதுவராலயம் ஏற்படுத்தும் பிரச்சினை பற்றி இந்திய சர்க்கார் பரிசீலித்துக்கொண்டிருப்பதாகவும், எதிர்காலத்தில் அந்த நாட்டுடன் அரசியல் உறவுகள் வைத்துக்கொள்ளும் பிரச்சினை பற்றியும் பரிசீலனை நடத்துவதாகவும், மக்கள் சபையில், கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில், பிரதமர் நேரு தகவல் தந்திருக்கிறார்.

## மேலும் பல உருக்கு ஆலைகளாம்!

உருக்கு ஆலைகள் அமைப்பதற்காக ஏற்கனவே கையெழுத்தாகியுள்ள ஒப்பந்தங்கள் தவிர மேலும் உருக்குத் தொழிற்சாலைகள் நிறுவ உத்தேசிக்கப்பட்டிருப்பதாக, இரும்பு, உருக்கு இலாகா மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.